**ஹங்குரன்கெத பிரதேச சபை**
**நுவரெலியா மாவட்டம்**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மே 06 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹங்குரன்கெத பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2016 ஆம் ஆண்டுடன் தொடர்பான மீளாண்வாண்டில் பெறப்பட்டிருந்த முத்திரைக் கட்டணங்கள் ரூபா. 392,780 கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 இன் கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. |
| (ii) | மீளாய்வாண்டின் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா ஆக ரூபா. 97,956 கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான மீதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 இன் கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. |
| (iii) | ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபா. 79,069 ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 இன் கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று தயாரிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 02 கணக்கு மீதிகளின் பெறுமதி அக் கணக்கு மீதிகளுடன் தொடர்பான உபயோகப் பேரேட்டு மீதிகளுடன் ஒப்பிடுகையில் ரூபா. 802,292 வித்தியாசம் காணப்பட்டது. | இணக்கமின்மை களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | 2019 இன் கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. |

**(இ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தேவையான தகவல்களை கணக்காய்விற்காக சமர்ப்பிக்காமை காரணமாக ரூபா 36,584,055 பெறுமதியான 13 கணக்கு மீதிகளை கணக்காய்வின் போது வெற்றிகரமாக அவதானிக்க முடியாது போனது. சமர்ப்பிக்கப்படாமை. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதி செய்கின்ற ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும். | மீதிப் பட்டியலைத் தயாரித்து சமர்ப்பிப்பதாகவும் 2017 இற்கு முன்னர் காணப்படும் மீதிகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் |

**(ஈ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(i) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று தொழில் கடன்பட்டோர் மீதி ரூபா. 23,585,221 | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை | ஏதிர்காலத்தில் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்தல். |

| | | |
|---|---|---|
| ஆகவிருந்ததுடன் இதில் ரூபா. 15,859,439 ஒரு வருடத்திற்கும் கூடுதலான காலம் அறவிடப்படாமல் இருந்துள்ளது. | | எடுத்தல் |

**(ii) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா. 1,383,868 இரண்டு செலுத்த வேண்டிய கணக்கு கணக்கு மீதிகள் 01 வருடத்திற்கும் கூடுதலான காலம் மிகைத்திருந்தது. | செலுத்த வேண்டிய மீதிகளை செலுத்தி தீர்த்தல் | ஏதிர்காலத்தில் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்தல். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மாகாண நிதிப் பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்கான வருடாந்தப் பொருட் பரிசீலனை 2019 மார்ச் 04 ஆம் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களுக்கு அமைவாகச் செயற்படல் வேண்டும் | பொருட் பரிசீலனை நடைபெற்றுக் கொண்டிருப்பதாக |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 1646 | சபைக்குச் சொந்தமான ஒரு கப் வாகனத்திற்காக மீளாய்வாண்டின் பெப்ரவரி தொடக்கம் டிசம்பர் வரையிலான காலத்திற்கான ஓட்டக் குறிப்புகள் | நிதிப் பிரமாணங்களுக்கு அமைவாகச் செயற்படல் வேண்டும் | எதிர்காலத்தில் ஓட்டக்குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்படும் |

கணக்காய்விற்குச்
சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,517,554 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,015,791 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,663,600 | 2,867,853 | 1,170,580 | 2,281,153 | 4,896,800 | 2,703,632 | 1,031,599 | 2,368,977 |
| வாடகை | 5,232,000 | 3,514,595 | 2,865,909 | 2,496,322 | 6,123,900 | 4,778,602 | 2,672,314 | 2,365,402 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,638,000 | 2,222,141 | 2,222,141 | - | 2,633,100 | 2,546,313 | 2,546,313 | - |
| ஏனைய வருமானம் | 14,336,800 | 12,574,779 | 5,778,730 | 7,155,791 | 9,350,000 | 10,057,110 | 5,870,431 | 6,088,369 |
| மொத்தம் | 24,860,400 | 21,179,368 | 12,037,360 | 11,933,266 | 23,003,800 | 20,085,657 | 12,120,657 | 10,822,748 |

#### 2.2.2 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஹங்குரன்கெத பொது சந்தைக் கட்டடத் தொகுதியில் 12 கடைகளிலிருந்து 4 வருடங்கள் முதல் 8 வருடங்கள் வரை காணப்படுகின்ற ரூபா. 2,130,712 நிலுவை கடை வாடகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | பிரதேச சபைகள் சட்டத்தின் பிரமாணங்களுக்கு அமைவாக நிலுவையினை அறவிடல். | சட்ட ரீதியான நடவடிக்கைகள் மூலம் நிலுவையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக. |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின திசெம்பர் 31 ஆம் திகதி அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா. 1,119,993 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா. 4,389,750 அறவிடப்பட்டிருக்க வில்லை. | குறித்த தொகைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல். | நிலுவையினை எதிர்காலத்தில் அறநவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ உதவியாளர் சேவையில் உள்ளடங்கும் காசாளர் பதவி ஒரு செயற்பாடாக இருப்பினும் சபைக்கு 2018.03.26 ஆம் திகதி முதல் காசாளர் பதவியில் தொழிற்படுவது மின்சார தொழில்நுட்ப ஊழியருக்கு வழங்கப்பட்டிருந்தது. | இத் தொழிற்பாட்டிற்கான பொருத்தமான ஒரு ஊழியரை நியமித்தல். | 2019.06.01 திகதி முதல் இப் பதவிக்காக முகாமைத்துவ உதவியாளர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 பிரதேச சபை நிதி மற்றும் முகாமைத்துப் பிரமாணத்தின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டுடனும் ஆண்டின் உள்ளபடியான வருமானத்தையும் செலவினத்தையும் ஒப்பீடு செய்த போது ஏற்படும் முரண்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் கூற்றினை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த பிரமாணத்தின் பிரகாரம் முரண்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் கூற்றினை சமர்ப்பித்தல். | 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதை செயற்படுத்துவதென தெரிவித்துக் கொள்கிறேன். |